

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## ஜனவரி - 2020

*We Are Here..!! To Guide You..!!*



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## ஜனவரி - 21.01.2020

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- விளையாட்டு செய்திகள்








## தமிழக நிகழ்வுகள்

- தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகம், பெரிய வகை சரக்கு கப்பலை கையாண்டு புதிய சாதனை படைத்துள்ளது. தூத்துக்குடி வ.உ.சி துறைமுகத்துக்கு **பனாமா நாட்டு கொடியுடன் 254.52 மீட்டர் நீளமும், 43 மீட்டர் அகலமும், 12.23 மீட்டர் மிதவை ஆழமும்** கொண்ட பெரிய வகை **சரக்குக் கப்பல்** ஞாயிற்றுக்கிழமை **(ஜனவரி 19) வந்தடைந்தது.**
    - தூத்துக்குடி வ.உ.சி துறைமுகத்துக்கு 93,353 டன் சரக்குகளுடன் பெரிய வகை கப்பல் வந்தது புதிய சாதனை ஆகும்.
    - **செய்தி துளிகள்:**
        - இதற்குமுன்பு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 16ஆம் தேதி எம்.வி. என்பிஏ வேர்மீர் என்ற கப்பலின் மூலம் 89,777 டன் நிலக்கரி கையாளப்பட்டது.
        - தூத்துக்குடி வ.உ.சி. துறைமுக பொறுப்புக் கழக தலைவர் தா.கி.ராமச்சந்திரன்

## தேசிய நிகழ்வுகள்

- புது தில்லியில் நடைபெறும் **குடியரசு தின அணிவகுப்பில்,** இந்த ஆண்டு **மகளிர் சிஆர்பிஎ.்.ப் வீராங்கனைகளின் சாகச நிகழ்ச்சிகளும்** முதல் முறையாக **இடம்பெற உள்ளது.**

- ஜனவரி 26ம் தேதி நடைபெறவுள்ள குடியரசு தின அணிவகுப்பு நிகழ்ச்சியில் மகளிர் சிஆர்பிஎ.்.ப் படையைச் சேர்ந்த 65 பேர் பங்கேற்று மோட்டார் சைக்கிள்களில் சாகசங்களை நிகழ்த்த உள்ளனர்.
- **செய்தி துளிகள்:**
  - சிஆர்பிஎ.்.ப் 1986ம் ஆண்டு முதல் முறையாக ஆயுதம் தாங்கிய மகளிர் படைப்பிரிவை உருவாக்கியது.
  - தற்போது இதில் 6 படைப்பிரிவுகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் தலா ஆயிரம் மகளிர் இடம்பெற்றுள்ளனர்.

## சர்வதேச நிகழ்வுகள்

- **சீன ஊடகக் குழுமம் ஏற்பாடு செய்துள்ள 2020ஆம் ஆண்டு வசந்த விழாவுக்கான கலை நிகழ்ச்சி ஜனவரி 24ஆம் நாள்** நடைபெற உள்ளது. 170 நாடுகள் மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்த 460 ஊடகங்கள், நடப்பு வசந்த விழாவுக்கான கலை நிகழ்ச்சி பற்றிய செய்திகளை வெளியிடும்.
  - இந்தியா, இத்தாலி, ஆஸ்திரேலியா, ஐக்கிய அரபு அமீரகம், எகிப்து உள்ளிட்ட 20க்கும் மேலான நாடுகளின் திரையரங்கு மற்றும் தொலைக்காட்சி நிலையங்களில், வசந்த விழாவுக்கான கலை நிகழ்ச்சியின் காணொலி ஒளிபரப்பப்படும்.

- **செய்தி துளிகள்:**
    - இந்நிகழ்ச்சி 1983ஆம் ஆண்டு தொடங்கி நடைபெற்று வருகிறது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **நீர்மூழ்கி கப்பலில்** இருந்து **அணு ஆயுதங்களை** எடுத்துச் சென்று **எதிரி இலக்குகளை தாக்கும் கே-4 ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது**.
    - இந்த சோதனை ஆந்திர மாநில கடற்பகுதியில் நடைபெற்றது என்றும், இந்த ஏவுகணை ஆனது சுமார் 3,500கி.மீ தொலைவு வரை உள்ள இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.
    - **செய்தி துளிகள்:**
        - இந்திய பாதுகாப்புத் துறை ஆய்வு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) இந்த ஏவுகணையை உருவாக்கியது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அரிஹந்த் நீர்மூழ்கி கப்பலில் இந்த ஏவுகணைகள் பொருத்தப்படும்.
        - 700கி.மீ தொலைவு வரையிலான இலக்குகளைத் தாக்கும் பிஓ-5 ஏவுகணை இந்தியாவின் முதல் நீர்மூழ்கி ஏவுகணை ஆகும்.

# விளையாட்டு நிகழ்வுகள்

- **கேலோ இந்தியா யூத் போட்டிகளின்** ஒரு பகுதியாக நடைபெற்ற **17 வயதுக்குட்பட்ட மகளிர் கூடைப்பந்து போட்டியில் தமிழக அணி சாம்பியன் பட்டத்தை** கைப்பற்றியது.
    - கேலோ இந்தியா போட்டியில் இறுதி ஆட்டத்தில் 2 புள்ளிகள் வித்தியாசத்தில் ராஜஸ்தானை வீழ்த்தி தங்கப் பதக்கத்தை கைப்பற்றியது தமிழகம். தமிழக வீராங்கனை நிவேதா ஸ்ரீ அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தார்
    - **செய்தி துளிகள்:**
        - தமிழக அணி ஏற்கெனவே கடந்த 2019 கேலோ இந்தியா, யூத் தேசியப் போட்டி இறுதிச் சுற்றில் வெள்ளிப் பதக்கமே வென்றிருந்தது.

We Shine Academy TM

## திருக்குறள்

**குறள் : 84**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : விருந்தோம்பல்

**அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**

**நல்விருந்து ஓம்புவான் இல்.**

**விளக்கம் :**முகம் மலர்ந்து விருந்தினரை உபசரிப்பவனது வீட்டில்,

திருமகள் மனம் மகிழுந்து வாழ்வாள்